Annual Subscription – Rs.130/-
ஆண்டு சந்தா – ரூ.130/-

*Price – Rs.10/-*
தனி பிரதி – ரூ.10/-

# பொறியாளர்

## PORIYAALAR

கட்டடம் - 14
Volume – 14

அடுக்கு - 10
Issue - 10

ஜூலை 2023
July 2023







தமிழக நீர்வளத்துறை, பொதுப்பணித்துறை வரலாற்றில் தலைமை பொறியாளர் காலிப் பணியிடங்களை பதவி உயர்வில் உடனுக்குடன் பணியமர்த்தியும், ஏராளமானோருக்கு சிறப்புத் தலைமை பொறியாளர் பதவியும் வழங்கி உத்தரவிட்ட **மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் திரு.மு.க.ஸ்டாலின்** அவர்களுக்கும், உறுதுணையாக இருந்த **மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் திரு.துரைமுருகன்** அவர்களுக்கும் **மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு** அவர்களுக்கும் எங்கள் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

மேற்கண்ட நிகழ்விற்கு உரிய அரசாணைகளை உடனுக்குடன் வெளியிட்ட **அரசு கூடுதல் தலைமைச் செயலர், நீர்வளத்துறை** அவர்களுக்கும், **அரசு முதன்மைச் செயலர், பொதுப்பணித்துறை** அவர்களுக்கும் எங்கள் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறோம். **- ஆசிரியர்**

பொறியாளர் சங்கம் மற்றும் உதவிப் பொறியாளர் சங்கம்
தமிழ்நாடு பொதுப்பணித்துறை
சேப்பாக்கம், சென்னை - 600 005
தொலைபேசி: 044-2851 5445 / 044-2951 0445
பொறியாளர் இராமலிங்கம் இல்லம் : 044 - 2854 4043
website : www. aoeaeatnpwd.org / e-mail : aoe_aea@yahoo.com, gsaoe.pwd@gmail.com



**பொறி.K.முருகன்**, தலைமை பொறியாளர் / அரசு சிறப்புச் செயலாளர், நீர்வளத்துறை மற்றும் பொதுச் செயலாளர், பொறியாளர் சங்கம் அவர்கள் பதவி உயர்வு பெற்றமைக்காக நமது சங்கத்தின் பொறுப்பாளர்கள் நேரில் சந்தித்து வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.





**பொறி.K.பிரபாகர்**, சிறப்புத் தலைமை பொறியாளர், நீ.வ.து. TNIAMP Cell, சேப்பாக்கம், சென்னை மற்றும் மாநில தலைவர், பொறியாளர் சங்கம் அவர்கள் பதவி உயர்வு பெற்றமைக்காக நமது சங்கத்தின் பொறுப்பாளர்கள் நேரில் சந்தித்து வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.



**பொறி.S.கோபாலகிருஷ்ணன்**, கண்காணிப்புப் பொறியாளர், நீ.வ.து. PW Workshop & Stores, சென்னை மற்றும் மாநில உப தலைவர், பொறியாளர் சங்கம் அவர்கள் பதவி உயர்வு பெற்றமைக்காக நமது சங்கத்தின் பொறுப்பாளர்கள் நேரில் சந்தித்து வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.

15.07.2023

**பொதுச் செயலாளர் மடல்**

## பெருமதிப்பிற்குரியீர், பேரன்பிற்கினியீர், வணக்கம்.

✍ நமது நீர்வளத்துறை மற்றும் பொதுப்பணித்துறையில் காலியாக உள்ள தலைமைப் பொறியாளர் பதவி உயர்வுகளை உடன் வழங்கியும் பதவி உயர்வு பெற்ற தலைமைப் பொறியாளர்களின் மூத்தவர்களுக்கு சிறப்புத் தலைமைப் பொறியாளர் பதவியும் வழங்கி நம் துறைகளுக்கு சிறப்பு செய்திட்ட மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களுக்கும் நமது சங்கங்களின் சார்பில் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறோம். மேலும் இது தொடர்பான அரசாணைகளை உடனுக்குடன் வழங்கிய அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், நீர்வளத்துறை அவர்களுக்கும் அரசு முதன்மைச் செயலாளர், பொதுப்பணித்துறை அவர்களுக்கும், தலைமைச் செயலக அலுவலர்களுக்கும், முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), நீர்வளத்துறை மற்றும் முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை அவர்களுக்கும் அவர்தம் அலுவலர்களுக்கும் எங்கள் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறோம். புதியதாக பதவியேற்றுள்ள தலைமைப் பொறியாளர்கள் மற்றும் சிறப்புத் தலைமைப் பொறியாளர்கள் அனைவருக்கும் எங்கள் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

✍ இந்த ஆண்டிற்கான (2023-24), கண்காணிப்புப் பொறியாளர் பதவி உயர்வுக்கான காலியிட மதிப்பீடு நீர்வளத்துறை மற்றும் பொதுப்பணித்துறைக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. தற்போது காலியாக உள்ள கண்காணிப்பு பொறியாளர் பதவிகளுக்கு இரு துறைகளிலும் விரைவில் பதவி உயர்வு வழங்கப்பட்டுவிடும். செயற்பொறியாளர் மற்றும் உதவிச்செயற்பொறியாளர் பதவி உயர்வுகளுக்கான காலியிட மதிப்பீடு அரசின் பரிசீலனையில் உள்ளது.

- ✍ உதவிப்பொறியாளர் (சிவில்) நேரடி நியமனம் தொடர்பான வழக்கை விரைவில் முடித்து உதவிபொறியாளர்களை இரு துறைகளிலும் நியமனம் செய்திட நடவடிக்கை எடுத்திடுமாறு நம் இரு துறைகளின் முதன்மைத் தலைமைப் பொறியாளர்களை வேண்டியுள்ளோம்.

- ✍ நமது ஈரோடு கிளைச் சங்கத் தலைவரும், பொதுப்பணித்துறை கோவை மண்டல தலைமைப் பொறியாளருமான பொறி.R.இளஞ்செழியன் அவர்கள் கடந்த 30.06.2023 அன்று ஓய்வு பெற்றதால், அவர் நம் சங்கங்களுக்கு கடந்த 35 ஆண்டுகளாக ஆற்றிய தன்னலமற்ற சேவையை நினைவு கூறும் வகையில் ஈரோடு கிளைச் சங்கத்தால் அன்னாருக்கு சிறப்பான பணி நிறைவு பாராட்டுவிழா நடைபெற்றது. இவ்விழாவில் மூத்த பொறியாளர்கள், தலைமைச் சங்கப் பொறுப்பாளர்கள், கிளைச் சங்கப் பொறுப்பாளர்கள் மற்றும் ஈரோடு கிளை உறுப்பினர்கள் பெருந்திரளாக கலந்துகொண்டு அன்னாரை மனதார வாழ்த்தினர். இது தொடர்பான செய்திகள், படங்கள் இவ்விதழில் வெளியிடப்பட்டுள்ளது.

- ✍ நமது பொறியாளர்களின் ஊதிய விகிதம் தொடர்பாக உயர்நீதிமன்றத்தில் உள்ள வழக்குகள் மற்றும் உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள (தொழில்நுட்ப உதவியாளர்களிலிருந்து நேரடியாக நியமனம் செய்யப்பட்ட) உதவிப்பொறியாளர்களின் முதுநிலை தொடர்பாக வழக்குகள் இந்த மாதத்திலேயே விசாரிக்கப்பட்டு முடிவு செய்யபட்டுவிடும் என எதிர்பார்க்கின்றோம். எனவே உறுப்பினர்கள் வழக்கு நிதியினை தாராளமாக வழங்கிடுமாறு கனிவுடன் கோருகிறோம்.

- ✍ செப்டம்பர் மாத இறுதியில் மையச் சங்க பொறுப்பாளர்களுக்கான தேர்தல் நடைபெற உள்ளதால் அனைத்து கிளைச் சங்கப் பொறுப்பாளர்களும் தங்களது கிளையின் உறுப்பினர் விபரங்களை உடன் தலைமைச் சங்கத்திற்கு அனுப்பிட வேண்டுகிறோம்.

மிக்க அன்புடன்,

| | |
|---|---|
| **பொறிஞர்.மு.மதன்,** | **பொறிஞர்.கா.முருகன்,** |
| பொதுச் செயலாளர், உதவிப் பொறியாளர் சங்கம் | பொதுச் செயலாளர்,பொறியாளர் சங்கம் |

**Promotion of Superintending Engineers as Chief Engineers in WRD, Vide G.O.(2D) No.35, Water Resources (A2) Department, dated 01.07.2023**

| | | |
|---|---|---|
| 1 | **Er.M.Subramanian,** Superintending Engineer, WRD, Special Project Circle, Trichy | Chief Engineer, WRD, Trichy Region, Trichy |
| 2 | **Er.K.Murugan,** Superintending Engineer / Joint Director, WRD, IWS Hydrology and Quality Control, Tharamani, Chennai | Chief Engineer / Special Secretary to Government, WRD, Secretariat, Chennai-9 |

**We wish the above Engineers on their promotion as Chief Engineer – Editor**

**Promotion & Postings of Superintending Engineer as Chief Engineer in PWD, Vide G.O.(2D) No.9, Public Works (Estt-I(1)) Department, dated 10.07.2023**

| | | |
|---|---|---|
| 1 | **Er.E.Senthil,** Superintending Engineer, PWD, HR&CE, Chennai (O/D) | Chief Engineer, PWD, Technical Education Circle, Guindy, Chennai |

**We wish the above Engineer on his promotion as Chief Engineer – Editor**

**Upgradation of Superintending Engineers as Special Chief Engineers in WRD, Vide G.O.(2D) No.35, Water Resources (A2) Department, dated 01.07.2023**

| | | |
|---|---|---|
| 1 | **Er.S.Manoharan,** Joint Chief Engineer, WRD | Special Chief Engineer, O/o the Chief Engineer, Plan Formulation, WRD, Chennai |
| 2 | **Er.I.Selvapackiam,** Superintending Engineer / Director | Special Chief Engineer, WRD, Dam Safety Directorate, Chennai |
| 3 | **Er.M.Maria Henri George,** Superintending Engineer, WRD | Special Chief Engineer, WRD, Mining & Monitoring Circle, Chennai |
| 4 | **Er.S.Muthu Parvatha Vardhini,** Joint Chief Engineer, WRD | Special Chief Engineer, WRD, O/o the Chief Engineer, SG&SWRDC, Tharamani, Chennai |
| 5 | **Er.M.Kalaiselvi,** Superintending Engineer, WRD | Special Chief Engineer, WRD, Ground Water Circle, Chennai |
| 6 | **Er.K.Prabakar,** Superintending Engineer, WRD | Special Chief Engineer, WRD, TNIAM Project, Chennai |
| 7 | **Er.C.T.Shanmugam,** Superintending Engineer, WRD | Special Chief Engineer, WRD, Upper Palar Basin Circle, Vellore |
| 8 | **Er.D.Malarvizhi,** Superintending Engineer, WRD | Special Chief Engineer, WRD, Vaippar Basin Circle, Virudhunagar |
| 9 | **Er.P.Babu,** Joint Chief Engineer, WRD | Special Chief Engineer, WRD, Operation and Maintenance, Chennai |

| | | |
|---|---|---|
| 10 | **Er.V.Dhamodaran,**<br>Superintending Engineer, WRD | Special Chief Engineer, WRD, Aliyar Basin Circle, Pollachi |
| 11 | **Er.R.Pandy,**<br>Superintending Engineer, WRD | Special Chief Engineer, WRD, Amaravathi Basin Circle, Palani |
| 12 | **Er.K.Senthil Kumar,**<br>Superintending Engineer / Water Resources Expert, Hydrologist, WRD | Special Chief Engineer / Water Resources Expert / Hydrologist, WRD, SWaRMA |

**We wish the above Engineers on their promotion as Special Chief Engineer - Editor**

**Upgradation of Superintending Engineers as Special Chief Engineer in PWD, Vide G.O.(2D) No.9, Public Works (Estt-I(1)) Department, dated 10.07.2023**

| | | |
|---|---|---|
| 1 | **Er.E.Mohanasundaram,**<br>Superintending Engineer, PWD | Special Chief Engineer, PWD, Buildings (C&M) Circle, Tiruvannamalai |
| 2 | **Er.J.Menaka,**<br>Superintending Engineer, PWD | Special Chief Engineer, PWD, P&D Circle, Chepauk, Chennai |
| 3 | **Er.R.Venkatachalam,**<br>Superintending Engineer, PWD | Special Chief Engineer, PWD, Buildings (C&M) Circle, Madurai |
| 4 | **Er.P.Shanmugam,**<br>Superintending Engineer, PWD | Special Chief Engineer, PWD, Buildings (C&M) Circle, Salem |

**We wish the above Engineers on their promotion as Special Chief Engineer - Editor**

**Promotion & Posting of Executive Engineers (Civil) as Superintending Engineers (Civil) in WRD, Vide G.O.(D) No.123, Water Resources (A2) Department, Dated 19.06.2023**

| | | |
|---|---|---|
| 1 | **Er.T.Jayanthi,**<br>Executive Engineer, WRD, IMTI, Trichy | Superintending Engineer, WRD, Plan Formulation Circle, Trichy |
| 2 | **Er.S.Manmathan,**<br>Executive Engineer, WRD, Special Project Division, Perundurai | Superintending Engineer, WRD, Bhavani Basin Circle, Erode |
| 3 | **Er.S.Gopalakrishnan,**<br>Executive Engineer / General Superintendent, WRD, Workshop and Stores, Chennai | Superintending Engineer, WRD, Workshop and Stores Circle, Chennai |
| 4 | **Er.P.Sundararajan,**<br>Executive Engineer, WRD, Tamil Nadu Warehousing Corporation, Chennai (O/D) | Superintending Engineer / Joint Chief Engineer, WRD, DR&CS, Chennai |

**We wish the above Engineers on their promotion as Superintending Engineer – Editor**

**Promotion & Posting of Assistant Executive Engineers (Civil) as Executive Engineers (Civil) in WRD, Vide G.O.(D) No.126, Water Resources (A2) Department, Dated 19.06.2023**

| | | |
|---|---|---|
| 1 | **Er.R.Subramanian,**<br>Assistant Executive Engineer, WRD | Executive Engineer, WRD, Special Project Division, Perundurai |

| | | |
|---|---|---|
| 2 | **Er.V.Sankar**<br>Assistant Executive Engineer, WRD | Executive Engineer, WRD, Quality Control Division, Chennai |
| 3 | **Er.G.Azambasha,**<br>Assistant Executive Engineer, WRD | Executive Engineer / General Superintendent, WRD, Workshop and Stores, Chennai |
| 4 | **Er.K.Kanchithurai,**<br>Assistant Executive Engineer, WRD | Executive Engineer, WRD, Aliyar Basin Division, Pollachi |
| 5 | **Er.K.R.Suja,**<br>Assistant Executive Engineer, WRD | Executive Engineer / Deputy Chief Engineer, WRD, Coimbatore Region, Coimbatore |
| 6 | **Er.S.Ramesh,**<br>Assistant Executive Engineer, WRD | Executive Engineer, WRD, Ground Water Division, Vellore |
| 7 | **Er.P.Balamurugan,**<br>Assistant Executive Engineer, WRD | Executive Engineer, WRD, Special Project Division, Kumbakonam |
| 8 | **Er.M.Sankar,**<br>Assistant Executive Engineer, WRD | Executive Engineer, WRD, Project Management Unit, Thanjavur |

**We wish the above Engineers on their promotion as Executive Engineer – Editor**

**Promotion & Posting of Assistant Executive Engineers (Civil) as Executive Engineers (Civil) in WRD, Vide G.O.(D) No.127, Water Resources (A2) Department, Dated 19.06.2023**

| | | |
|---|---|---|
| 1 | **Er.R.Iyyamperumal,**<br>Assistant Executive Engineer, WRD | Executive Engineer, WRD, Agniyar Basin Division, Pattukottai |
| 2 | **Er.A.Balamurugan,**<br>Assistant Executive Engineer, WRD | Executive Engineer, WRD, Nangangiyar Basin Division, Palani |

**We wish the above Engineers on their promotion as Executive Engineer – Editor**

**Transfer and posting of Chief Engineer in PWD, Vide G.O.(2D) No.9, Public Works (Estt-I(1)) Department, dated 10.07.2023**

| | | |
|---|---|---|
| 1 | **Er.S.Kasilingam,**<br>Chief Engineer, PWD, Technical Education Circle, Guindy, Chennai | Chief Engineer, PWD, Coimbatore Region, Coimbatore |

**Transfers and postings of Executive Engineers in WRD, Vide G.O.(D) No.125, Water Resources (A2) Department, dated 19.06.2023**

| | | |
|---|---|---|
| 1 | **Er.C.Thiliban,**<br>Executive Engineer, WRD, Agniyar Basin Division, Pattukottai | Executive Engineer, WRD, Mining & Monitoring Division, Madurai |
| 2 | **Er.P.Thirumoorthy,**<br>Executive Engineer, WRD, Quality Control Division, Chennai | Executive Engineer, WRD, Lower Bhavani Basin Division, Erode |

## திருச்சி கிளை:

திருச்சி கிளையின் சிறப்பு பொதுக்குழு கூட்டம் 11.05.2023 மாலை 6.15 மணியளவில் பொறியாளர் நாச்சிமுத்து இல்லத்தில் நடைபெற்றது. திருச்சி கிளை பொறியாளர் சங்க தலைவர் மற்றும் கண்காணிப்பு பொறியாளர், சிறப்பு திட்ட வட்டம் திருச்சி பொறி.M.சுப்பிரமணியன் அவர்கள் கூட்டத்தை தலைமை தாங்கி நடத்தினார். பொறியாளர் சங்க செயலர் பொறி.S.J.சிவகுமார் சங்க செயல்பாடுகளை எடுத்துரைத்தார்.

உறுப்பினர்கள் கருத்துகளை தெரிவித்தபின் கீழ்காணும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. தஞ்சையில் 20.05.2023 அன்று நடைபெற உள்ள மைய செயற்குழு கூட்டத்தில் திருச்சி கிளை உறுப்பினர்கள் திரளாக கலந்துகொள்வது என தீர்மானிக்கப்பட்டது.
2. ஊதிய நிர்ணய வழக்குகளை விரைவில் முடித்து ஒருநபர் குழுவில் பெற்ற ஊதியத்தை நிலை நிறுத்த மைய சங்கத்தினை வலியுறுத்துகிறோம்.
3. நமது பொறியாளர்களின் பதவி உயர்வுகளை விரைவில் பெற்று தந்த மைய சங்கத்திற்கு இக்கிளை சங்கம் நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறது.
4. நீர்வளத்துறை கட்டுமானங்களின் வடிவமைப்புகளை (Design) காலதாமதம் இன்றி பெற்றிட ஏதுவாக மண்டல வாரியாக வடிவமைப்பு கோட்டங்களை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்க மைய சங்கத்திற்கு கோரிக்கை வைக்கப்படுகின்றது.
5. நீதிமன்ற வழக்குகளை நடத்த தேவையான வழக்கு நிதியினை கிளை சங்கம் மூலமாக தாராளமாக வழங்கிட உறுப்பினர்களிடம் கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேலும் மைய சங்கத்தின் கோரிக்கைகளை ஏற்று ரூ.50,000/- வழக்கு நிதியினை தஞ்சாவூர் மைய செயற்குழு கூட்டத்தில் தலைமை சங்கத்திடம் வழங்குவது என தீர்மானிக்கப்பட்டது.
6. திருச்சி பொறியாளர் இல்ல கூடுதல் அறை கட்டும் பணிகள் 70 சதவீதம் முடிவடைந்த நிலையில் மீதமுள்ள பணிகளை விரைந்து முடிப்பது எனவும், இதற்கு தேவைப்படும் நிதியினை நமது உறுப்பினர்கள் தாராளமாக வழங்கும்படி கோரிக்கை வைக்கப்படுகின்றது.
7. பொறியாளர் இல்ல கட்டுமான பணிகளுக்கு தாராளமாக நிதியுதவி வழங்கிய தலைமை சங்கம், மூத்த பொறியாளர்கள் சங்கம், புரவலர்கள், பொறுப்பாளர்கள் மற்றும் இந்நாள் மற்றும் முன்னாள் பொறியாளர்கள் அனைவருக்கும் நெஞ்சார்ந்த நன்றிகள் தெரிவிக்கப்பட்டது.

உதவிப்பொறியாளர் சங்க செயலாளர் திரு.R.கார்த்திகேயன் நன்றியுரை வழங்க இரவு உணவுடன் கூட்டம் இனிதே நிறைவுபெற்றது.

**பொறி.R.கார்த்திகேயன்**
செயலர், உதவிப்பொறியாளர் சங்கம்

**பொறி.S.J.சிவகுமார்,**
செயலர், பொறியாளர் சங்கம்

# Stay Extended – Pay Case – High Court of Madras Order



IN THE HIGH COURT OF JUDICATURE AT MADRAS

DATED: 28.06.2023

CORAM

THE HON'BLE MR.SANJAY V.GANGAPURWALA, CHIEF JUSTICE
AND
THE HON'BLE MR.JUSTICE P.D.AUDIKESAVALU

W.A.Nos.1340, 1271, 1305, 1273, 1314, 1275,
1315, 1316, 1307, 1313, 1309 & 1341 of 2021

[W.A.No.1340 of 2021]

Tamil Nadu Electrical Inspectorate
Engineers' Association
Rep. by its General Secretary
No.37, 1st Cross Street
Sripuram Colony, St.Thomas Mount
Chennai – 600 016. .. Appellant

Vs.

1. The Government of Tamil Nadu
   Represented by its Additional Chief Secretary
   Finance Department
   Fort St. George, Chennai 600 009.

2. The Chief Electrical Inspector
   Tamil Nadu Electrical Inspectorate
   Thiru.Vi.Ka.Estate, Guindy
   Chennai – 25. .. Respondents



https://www.mhc.tn.gov.in/judis

Prayer in W.A.No.1340 of 2021: Appeal filed under Clause 15 of the Letters Patent against the order dated 19.04.2021 in W.P.No.729 of 2021.

| | | |
|---|---|---|
| For the Appellants in W.A.Nos.1340, 1341 of 2021 | : | Mr.N.Subramaniyan |
| For the Appellants in W.A.No.1273, 1315, 1314, 1316, 1307, 1313 & 1309 of 2021 | : | Mr.Naveen Kumar Murthy for Ms.S.Varsha |
| For the Appellants in W.A.No.1305 of 2021 | : | Ms.Swarnam J.Rajagopalan |
| For the Appellant in W.A.No.1271 of 2021 | : | Mr.MA.Gouthaman |
| For the Respondents in W.A.Nos.1340, 1271, 1305, 1273, 1315, 1341 & 1275 of 2021 | : | Mr.J.Bharanidharan Additional Government Pleader for R1 & R2 |
| For the Respondents in W.A.No.1314, 1316, 1307, 1313 & 1309 of 2021 | : | Mr.U.Bharanidharan Additional Government Pleader for R1<br><br>No Appearance for R2 |

COMMON JUDGMENT
(Delivered by the Hon'ble Chief Justice)

Heard Mr.N.Subramaniyan, Mr.Naveen Kumar Murthy, Ms.Swarnam J.Rajagopalan and Mr.MA.Gouthaman for the respective appellants and Mr.U.Bharanidharan, learned Additional Government Pleader for the respondents.

2. Learned counsel appearing on behalf of the appellants submit that the appeals are filed against interim orders. The learned Single Judge is now hearing the writ petitions and the hearing has commenced.

3. As the parties have proceeded further with hearing of the petitions, no further orders are necessary in the present appeals.

4. The writ appeals, accordingly, are disposed of. Interim orders, if any, granted earlier by this Court shall continue till the disposal of the writ petitions. There will be no order as to costs.

Consequently, C.M.P.Nos.8091, 8090, 8106, 8102, 8368, 8370, 8369, 8292, 8283, 8287, 8280, 8289 & 8288 of 2021 are closed.

(S.V.G., CJ.) (P.D.A., J.)
28.06.2023

Index : Yes/No
Neutral Citation : Yes/No

drm

To

1. The Additional Chief Secretary
   The Government of Tamil Nadu
   Finance Department
   Fort St. George, Chennai 600 009.

2. The Chief Electrical Inspector
   Tamil Nadu Electrical Inspectorate
   Thiru.Vi.Ka.Estate, Guindy
   Chennai – 25.

**திருச்சி பொறியாளர் நாச்சிமுத்து இல்ல புனரமைப்பு மற்றும் பொறியாளர் வீரப்பன் இல்லத்தின் முதல் தளம் எழுப்பும் பணிகளுக்காக சிறப்பு நிதியினை வழங்கியோர்கள்**

| வ.எண். | பெயர் | ரூபாய் |
|---|---|---|
| 1 | **பொறி.G.முரளிதரன்,** Former Engineer-in-Chief & Chief Engineer (General) WRD, Chepauk, Chennai | ரூ.25,000/- |
| 1 | **பொறி.S.திருமாறன்,** Secretary, Assistant Engineer Association, Thanjavur | ரூ.10,000/- |
| 2 | **பொறி.M.அமுதா,** AE, WRD, Middle Cauvery Basin Circle, Trichy | ரூ.2,000/- |
| 3 | **பொறி.R.வெங்கடேசன்,** EC Member AOE, Trichy Branch & AEE, PWD, Buildings (C&M) Sub Div. Trichy | ரூ.25,000/- |
| 4 | **பொறி.K.கனகராஜ்,** Secretary, Assistant Engineer Association, Cuddalore & Villupuram Branch & AE, WRD, Special Project Division, Kumbakonam | ரூ.10,000/- |
| 5 | **பொறி.K.கருணாநிதி,** Former Special Chief Engineer, Chennai | ரூ.5,000/- |
| 6 | **பொறி.S.சிவகுமார்,** Executive Engineer, WRD, Special Project Division, Pudukottai | ரூ.65,000/- |
| 7 | **பொறி.G.உமாசங்கர்,** AEE, WRD, Special Project Division, Pudukottai | |
| 8 | **பொறி.K.விக்னேஷ்வர்,** AE, WRD, Special Project Division, Pudukottai | |
| 9 | **பொறி.M.ராஜேஸ்வரி,** AE, WRD, Special Project Division, Pudukottai | |
| 10 | **பொறி.A.அருணா,** AE, WRD, Special Project Division, Pudukottai | |
| 11 | **பொறி.A.ஆனந்தபாபு,** AE,WRD, Special Project Division, Pudukottai | |

**அன்பார்ந்த பொறியாளர் நண்பர்களே...**

திருச்சி பொறியாளர் இல்லத்தில் முதல் தளம் எழுப்பும் பணி 26.01.2023 அன்று தொடங்கப்பட்டு தற்போது பணிகள் நடைபெற்று வருகிறது. நமது உறுப்பினர்கள் தாராளமாக கட்டட நிதியினை வழங்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

**தங்கள் பங்களிப்பினை Online மூலமாக வழங்கிட திருச்சி கிளையின் வங்கி கணக்கு விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.**

**Name: Association of Engineers, TNPWD**

**Bank: Indian Overseas Bank, Branch: Abishekapuram**

**A/c No:023601000021873, IFSC Code: IOBA 0000236**

**Contact : Er.R.Anbazhahan, President AEA, Trichy Branch, Cell : 9894594994**

## PWD - RETIREMENT ON 30.06.2023

| | | |
|---|---|---|
| 1 | **பொறி.R.இளஞ்செழியன்** | தலைமைப் பொறியாளர் |
| 2 | **பொறி.K.புனிதவேல்** | சிறப்புத் தலைமைப் பொறியாளர் |
| 3 | **பொறி.K.அசோக்** | சிறப்புத் தலைமைப் பொறியாளர் |
| 4 | **பொறி.R.மணிவண்ணன்** | செயற்பொறியாளர் |
| 5 | **பொறி.K.அய்யாசாமி** | உதவி செயற்பொறியாளர் (மின்) |

அரசாணை (வாலாயம்) எண்.91, பொதுப்பணித்(பணி-I-2)துறை, நாள் : 30.06.2023

**We wish them a happy, peaceful & active retired life - Editor**

## WRD - RETIREMENT ON 30.06.2023

| | | |
|---|---|---|
| 1 | **பொறி.S.ராமமூர்த்தி** | தலைமைப் பொறியாளர் |
| 2 | **பொறி.P.செந்தில்குமார்** | தலைமைப் பொறியாளர் / அரசு சிறப்புச் செயலாளர் |
| 3 | **பொறி.S.இளங்கோ** | இணைத் தலைமைப் பொறியாளர் (பாசனம்) |
| 4 | **பொறி.A.பரகத் நிஷா** | கண்காணிப்புப் பொறியாளர் / திட்ட இயக்குநர் |
| 5 | **பொறி.R.A.முருகேசன்** | கண்காணிப்புப் பொறியாளர் |
| 6 | **பொறி.R.செல்வராஜன்** | கண்காணிப்புப் பொறியாளர் |
| 7 | **பொறி.P.கிருஷ்ணன்** | கண்காணிப்புப் பொறியாளர் |
| 8 | **பொறி.S.இந்திராகாந்தி** | துணைத் தலைமைப் பொறியாளர் |
| 9 | **பொறி.T.அன்பரசன்** | செயற்பொறியாளர் |
| 10 | **பொறி.C.இந்திரா** | உதவிசெயற்பொறியாளர் |
| 11 | **பொறி.P.மாரிசெல்வன்** | உதவிசெயற்பொறியாளர் |
| 12 | **பொறி.R.செல்லபாண்டியன்** | உதவிசெயற்பொறியாளர் |
| 13 | **பொறி.K.சந்திரமோகன்** | உதவிசெயற்பொறியாளர் |
| 14 | **பொறி.R.தட்சிணாமூர்த்தி** | உதவிசெயற்பொறியாளர் |

அரசாணை (வாலாயம்) எண்.262, நீர்வளத்(டி2)துறை, நாள்: 30.06.2023

**We wish them a happy, peaceful & active retired life - Editor**

## இரங்கல்:

**திரு.த.ஜோதிவேல், வயது (76) (பொறி.J.தேவேந்திரன், உதவிசெயற்பொறியாளர், கட்டடம் (க&ப), குன்னம், பெரம்பலூர், பொ.ப.து.** அவர்களின் அன்புத் தந்தையார்) 27.06.2023 அன்று பெரம்பலூரில் காலமானார் என்பதை மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். தனது தந்தையாரை இழந்து வருந்தும் **பொறி.J.தேவேந்திரன்,** அவர்களுக்கும் மற்றும் அவர்தம் குடும்பத்தாருக்கு நம்முடைய ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறோம். **- ஆசிரியர்**

## ஈரோடு கிளை:

ஈரோடு கிளை பொறியாளர் சங்க தலைவர் பொறி.R.இளஞ்செழியன்,B.E., M.B.A., அவர்கள் 30.06.2023 அன்று தலைமைப் பொறியாளர், பொ.ப.து., கோவை மண்டலம், கோவை பதவியில் பணி நிறைவு பெற்றார்.

இவர் சுமார் 35 ஆண்டுகள் ஈரோடு கிளையின் உறுப்பினர் மட்டுமல்லாது பல்வேறு பொறுப்புகள் வகித்து தற்பொழுது கிளைச் சங்கத் தலைவர் பதவியில் தனித்துவம் பெற்று திகழ்கிறார். மேலும், மாநில உதவிபொறியாளர் சங்கத்திலும் உபதலைவராகவும் பொறுப்பு வகித்துள்ளார். சங்கத்தின் நலனிற்காகவும், உறுப்பினர்களின் நலனிற்காகவும் பற்பல பணிகளை மேற்கொண்டுள்ளார். இன்று நாம் பயன்படுத்தும் எழில் கொஞ்சும் ஈரோடு பொறியாளர் இல்லம் இவரது வடிவமைப்பு மற்றும் மேற்பார்வையில் கட்டப்பட்டது.

எங்கேயும், எப்பொழுதும் பொறியாளர்களுக்காக குரல் கொடுக்க தயங்காதவர், ஈரோடு கிளை பொறியாளர்களுக்காக மட்டுமல்லாமல் தமிழகத்தில் எந்த மூலையிலுள்ள பொறியாளர்கள் நாடினாலும் அவர்கள் நலம் பெற உதவி செய்பவர். அஞ்சாமை இவரது தனித்துவம், அதனைக்கொண்டு எந்த சவாலையும் சாதனையாக்குபவர். அதனாலேயே இவர் சங்கத்தின் **"சிங்கம்"** என அனைவராலும் அன்போடு அழைக்கபடுபவர்.

இவரின் சதாவதான தனித்திறமைகளால் கட்டப்பட்ட கட்டிடங்கள் பொதுப்பணித்துறைக்கு சிறந்த அடையாளத்தை சமுதாயத்தில் ஏற்படுத்தியுள்ளது. இதற்கு தற்பொழுது புதிதாக கட்டப்பட்டுள்ள மருத்துவக் கல்லூரிகளான திருப்பூர், நாமக்கல், உதகை, கிருஷ்ணகிரி, நாகப்பட்டினம் ஆகியன சான்றுகளாக உள்ளன.

**"மாந்தர்க்கு உள்ளத்தனையது உயர்வு"** எனும் வள்ளுவர் வாக்கிற்கேற்ப உயர்ந்த சிந்தனை கொண்டவர். உண்மை என்பது எங்கும் உள்ளது. அது தெய்வத்தின் மொழியாகும். இதனை நாளும் உரைத்திடும் நல்லவர் இவர். இவரது சீரிய தலைமையில் ஈரோடு கிளைச் சங்கத்தால் 1998, 2001, 2010, 2017 மற்றும் 2022 ஆகிய ஆண்டுகளில் 6 மாநிலப் பொதுக்குழுக் கூட்டங்களும், 1990 மற்றும் 2000 ஆகிய ஆண்டுகளில் 2 மாநில செயற்குழு கூட்டங்களும் அனைவரும் பாராட்டும் வண்ணம் நடத்தப்பட்டது.

இவர் சங்கம் அறிவிக்கும் அனைத்து போராட்டங்களிலும் முன்நின்று பங்கெடுத்தவர். இத்தகைய சிறப்புமிக்க தலைவர் அவர்களை சிறப்பிப்பதற்காக பாராட்டு விழா 01.07.2023 அன்று ஆலயமணி மஹால் ஈரோட்டில், ஈரோடு கிளைச் சங்கம் சார்பாகவும், கோவை மண்டல பொறியாளர் நண்பர்கள் சார்பாகவும் மற்றும் நல்விழைவாளர்களாலும் சிறப்பாக நடத்தப்பட்டது. இவ்விழா பொறியாளர் சங்கத்தின் மாநிலத் தலைவர் பொறி.K.பிரபாகர் அவர்கள் தலைமையில் நடத்தப்பட்டது. விழாவின் துவக்கத்தில் விழா நாயகரைப் பற்றிய

பத்து நிமிடக் காணொளி திரையிடப்பட்டது. நிகழ்ச்சிக்கு வரவேற்புரை பொறி.த. சந்திரசேகர், செயலாளர், ஈரோடு கிளை அவர்களால் மேற்கொள்ளப்பட்டு, முதன்மை வாழ்த்துரையை பொறி.K.பிரபாகர் அவர்களால் வழங்கப்பட்டது. இதனை தொடர்ந்து ஈரோடு கிளை இல்ல பொறியாளர் பொறி.து.கிருஷ்ணமூர்த்தி மற்றும் உதவி பொறியாளர் சங்க செயலாளர் பொறி.இரா.குமார் ஆகியோர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள். மேலும், இவ்விழாவில் மாநில உதவிபொறியாளர் சங்கத்தின் தலைவர் பொறி.A.அப்துல் குத்தூஸ் அவர்கள் மற்றும் பொதுச் செயலாளர் பொறி.M.மதன் அவர்கள், மூத்த பொறியாளர்கள், பல்வேறு கிளைச் சங்க பொறுப்பாளர்கள், பொறியாளர்கள், மருத்துவக் கல்லூரி முதல்வர்கள், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தைச் சார்ந்தவர்கள், தலைவர், மாநில ஒப்பந்ததாரர்கள் சங்கம், Builders Association of India, Erode, Chapter பொறுப்பாளர்கள், கட்டிட கட்டுமானப் பொருட்கள் விநியோகிப்பாளர்கள், வழக்கறிஞர்கள், Architects, உறவினர்கள் மற்றும் நண்பர்கள் ஆகியோர் கலந்துகொண்டு பாராட்டி வாழ்த்து தெரிவித்தனர். இவ்விழாவில் அனைவருக்கும் நாவிற்கினிய நற்சுவை விருந்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நிகழ்ச்சியில் **பொறி.R.இளஞ்செழியன்,** அவர்கள் ஏற்புரை வழங்கியபின், ஈரோடு கிளை பொருளாளர் **பொறி.ச.சர்மிளா** அவர்கள் நன்றி நவிழ இனிதே நிறைவுற்றது.

இவ்விழாவில் கலந்துகொண்டு வாழ்த்திய நல் உள்ளங்களுக்கு **பொறி.R.இளஞ்செழியன்** அவர்கள் சார்பில் நினைவுப் பரிசு வழங்கி தனது அன்பை தெரிவித்தார்கள்.

இவ்விழாவில் **பொறி.R.இளஞ்செழியன்** அவர்கள் வழங்கிய நன்கொடைகள்:

1. **ரூ.50,000/- (பொறியாளர் மைய சங்கத்திற்கு)**
2. **ரூ.11,466/- (பொறியாளர் மைய சங்கத்திற்கு -பொறியாளர் சேமநலநிதி முதிர்வுத் தொகை)**
3. **ரூ.2,00,000/- AOE Staffs & PRI Staffs (Employees Welfare Fund)**
4. **ரூ.1,00,000/- (அவர் மிகவும் விரும்பும் ஈரோடு கிளை - பொறியாளர் சங்கத்திற்கு)**

**பொறி.R.இளஞ்செழியன்** அவர்கள் மற்றும் அவரது குடும்பத்தார் பதினாறு பேறுகளும் பெற்று வாழ்ந்திட வாழ்த்துகிறோம்.

வாழ்க வளமுடன்!

**பொறி.R.குமார்,**
செயலர், உதவிப்பொறியாளர் சங்கம்

**பொறி.D.சந்திரசேகர்,**
செயலர், பொறியாளர் சங்கம்

எ.வ.வேலு,
பொதுப்பணித்துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்,
சென்னை - 600009

<u>நாள் : 30.06.2023</u>

## வாழ்த்து செய்தி

**பொறியாளர்.இரா.இளஞ்செழியன்**, பொதுப்பணித்துறை கட்டட கட்டுமான பிரிவு (கூட்டுறவுத்துறை) காஞ்சிபுரம் மாவட்டத்தில் உதவிப்பொறியாளராக பணியில் சேர்ந்து 36 **ஆண்டுகள்** பல்வேறு பதவிகளில் பணியாற்றி தற்போது முதன்மை பொறியாளராக கோவை மண்டலத்தில் 30.06.2023 அன்று பணி நிறைவு பெறுகிறார்.

இளஞ்செழியன் என்ற தமிழ் பெயரை கொண்டு பலரும் பாராட்டும் வகையில் பணியாற்றியவர். தன்னோடு பணியாற்றிய சக பணியாளர்களுடன் அன்போடு பேசி பழகியதோடு, அவர்களுக்கு அறிவுறையும் வழங்கி, அளப்பறிய பணிகளை சிறப்பாக செய்து முடிப்பவர்.

அரசின் பல்வேறு கட்டட பணிகளை முடித்திட ஒரு இலக்கை அமைத்துகொண்டு ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் அழகுற அமைத்து தந்தவர் என அனைவராலும் பாராட்டப்பட்டவர். அரசு பணியில் இன்று பணி நிறைவு பெறும் அவருக்கு என்னுடைய நல்வாழ்த்துக்களை தெரிவித்துகொள்கிறேன்.

பணி நிறைவு பெறும் பொறியாளர் **இரா.இளஞ்செழியன்** அவர்கள் நல்ல உடல் நலத்துடனும், குடும்பத்தாரோடும் நூறாண்டு காலம் வாழ வாழ்த்துகிறேன்.

(எ.வ.வேலு)
**பொதுப்பணித்துறை அமைச்சர்**

# மாநில மையச் சங்கத்தின் சார்பாக பொறி.R.இளஞ்செழியன் அவர்களுக்கு வாழ்த்து கவிதை

**சிறந்த பணிகளை**
**சிறப்புற செய்தவரை**
**சிறப்பு செய்ய கூடியுள்ளவர்கள்**
**அனைவருக்கும் எங்கள்**
**வணக்கங்கள்!**

உயர் உள்ளம் கொண்டவர்டகளும் -
புகழ் உயரத்தில் உள்ளவர்களும்
அவரவர் பார்வையில்
அவரவர் உள்ளத்தில்
அவரவர் விருப்பப்படி உறைவர் என்பது
மூதோர் உரை...

அவ்வகையில் எம்முள் பதிந்துள்ள
ஐயா அவர்களின் நினைவு முகம்!
இதழோர புன்னகையில்
அழையோரம் வசீகரத்தில்
இயல்பாய் தன்வசம்
இழுந்தவர்களில் நாமும் ஒருவர்!
ஈரோட்டார் என்போர் எல்லாம்
ஈகைதிறம் மிக்கவர் என
ஈர்ப்புகொள்ள செய்தவர் இவர்!
உள்ளத்தில் தூய்மை
உழைப்பில் நேர்மை
உயரத்திலும் பணிவு
உண்டான கொள்கையில் துணிவு
என இருப்பவர்
இதனை கொண்டதனால்
உணர்வில் ஆளுமையோடு
உறைபவர் ஆளுமைக்குரிய
உவமை என்றும் இவரே!
ஊக்கம் உடையவர்
உடையிடம் தேடி
உலகளாந்தவர் தம்
உள்ளத்துயையும் ஆக்கம் அது
தானாய் சென்றுரையும் என்பது
வள்ளுவர்வாக்கு
அதற்கு சமகாலத்தில் சாலச் சிறந்த
உதாரயம் இவர்!

எங்கு பணி செய்தாலும்
எந்நிலையில் பணி செய்தாலும்
எவரோடிருந்தாலும்
எப்போதும் துறையையும் சங்கத்தையும்
சிந்தையிலும் உணர்வாய் துடிப்பிலும்
நிலை நிறுத்தியவர் இவர்!

ஏற்றத்தை உடனிருப்போருக்கும்
ஏற்றித் தரும் இயல்புடையவர்!

சங்கத்தினை சொந்தமாக்கி
உறுப்பினர்களை உறவாக்கி
உவகை கொண்டவர் - இவர்பால்
உளமகிழ்ந்தோர் நாமெல்லாம்
என்பதால்தான்
உரிமையோடு கொண்டாடுகிறோம்
இவரை!

கட்டுமானத்தில் நுட்பங்களில்
கரை கண்டதால்தான்
கட்டிய கட்டடங்கள் எல்லாம்

காலம் உள்ளவரை இவர் பெயர் கூறும்
கட்டியகாரர்களாய் நிற்கின்றன்!

கனிவோடும் சற்றே
கண்டிப்போடும் கருனையோடும்
கம்பீரத்தோடும் காண்பதால்தானே
என்னவோ கட்டிய கட்டுமானங்களும்
கம்பீரமானவைகளாக நிற்கின்றன!

முடிவெடுப்பதில் சூரத்தனம்
செயலாக்கத்தில் அசூரத்தனம்
என்பதால்தான் பொறியாளர்
சமூகத்தில் இங்கே
முடிசூடா நிலை கொண்டுள்ளார்
என்பதற்கு முத்தான சாட்சி
மூத்த மந்திரி தந்த
பாராட்டு சான்றிதழ்.

சங்கத்தின் புரவலர்பலருள்
சத்தமில்லா பெரும் புரவலர் இவர்!
பணியின் காலமே 35 ஆண்டுக்குமேல்
நிறைவு தருணம் என்றாலும்
பணியில் மேற்பட்ட தருணங்கள்
சங்கப் பணியிலும்
பலமைல்கள்கள்எடுத்துரைக்க கால
அவகாசம் இல்லை.

உறுப்பினர்களுக்கு ஊறு ஏதும்
நேரா வண்ணம் பாதுகாப்பதிலும்
உறுப்பினர் உரிமை கோருவதிலும்

உளமார பணியினை செய்தமையால்
என்றும் கிளையையும் மையச்
சங்கத்தையும் உயிர்ப்போடு இருக்கச்
செய்தவர்!

சங்கத்தின் உயிர்நாடிகளுக்கு
தேவைப்படும்போதெல்லாம்
ஆக்சிஜன் செலுத்தும்
மருத்துவர் என்றால் அது மிகையல்ல!

அன்போடும் பண்போடும்
அமைந்த குடும்பத்தின்
அரும்பணியும் அவர்தம் கடமையை
அழகாய் செய்ய வழிவகுத்துள்ளது
என்பது உண்மையே!

அவர்தம் மக்களோடு
மனைநலம் பேணி
தன் உடல் நலம் சேர்த்து
மனநலம் சார்ந்து வாழ
வாழ்த்துகிறோம்!

ஓய்வு என்பது ஏதும் இல்லை
அதுவும் ஒரு கமாபுள்ளியே அன்றி
வாழ்வின் தொடர்கதை புதினத்தில்
அடுத்த அத்தியாயம் அதுவென்று
உணர்ந்தவர்

இளமை என்றும்
இதயத்தில் கொண்டவர்
என்று உணர்ந்ததால் தான்
இளஞ்செழியன் என்றே பெயர்
சூட்டப்பட்டுள்ளவர்
அதற்கு இளமையோடு
துறைக்கும் சங்கத்திற்கும்
செய்தபணி தொடர்வேண்டி
ஓய்வும் ஒரு ஆரம்பமே என கூறி
வாழ்த்துகிறோம்!

**எதிலும் பிரமாண்டம்**
**எப்போதும் பிரமாண்டம்**
**என்பதே தாரகமந்திரம்**
**என்பதில் என்றும் நிறை மாறாத**
**எண்ணம் கொண்டவரின்**
**எண்ணப்படி இவ்விழாவினை**
**சிறப்புச் செய்த ஈரோட்டு கிளைச்**
**சங்கத்தினருக்கு**
**பாராட்டுக்களையும்,**
**வாழ்த்துக்களையும்**
**கூறிகொள்கிறோம்.**
**மைய சங்கத்தின் சார்பில்!**

**பொறி.மு.தனசேகரன்,**
உதவிசெயற்பொறியாளர், நீ.வ.து.
மற்றும் செயற்குழு உறுப்பினர்,
பொறியாளர் சங்கம்.

01.07.2023 அன்று பொறியாளர் சங்கம் மற்றும் உதவிபொறியாளர் சங்கம் ஈரோடு கிளையின் சார்பாக நடைபெற்ற **பொறி.R.இளஞ்செழியன்,** தலைமை பொறியாளர், பொ.ப.து. கோயம்புத்தூர் மண்டலம், கோயம்பத்தூர் மற்றும் தலைவர், பொறியாளர் சங்கம் ஈரோடு கிளை அவர்களுடைய பணிநிறைவு பாராட்டு விழா காட்சிகள்.




Er.R.ELANCHELIAN
ERODE
BRANCH
AEA

17.06.2023 மற்றும் 18.06.2023 அன்று ஜம்மு - காஷ்மீர் யூனியன் பிரேதசத்தின் தலைநகர் ஸ்ரீநகரில் நடைபெற்ற இந்திய பொறியாளர் கூட்டமைப்பின் கூட்டத்தில் தமிழ்நாடு பொறியாளர் கூட்டமைப்பின் சார்பாக **பொறி.T.ஜெயந்தி, பொறி.K.முருகன், பொறி.A.அப்துல் குத்தூஸ், பொறி.M.மதன், பொறி.K.ஜெயந்தி, பொறி.R.தனசேகர், மற்றும் தென்னிந்திய கூட்டமைப்பின் சார்பில் பொறி.B.தனசீலன்** ஆகியோர்கள் கலந்துகொண்டனர். இக்கூட்டமானது அகில இந்திய கூட்டமைப்பின் தலைவர் **பொறி.S.ஆனந்த்** அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பொறியாளர்கள் ஊதிய விகிதம், காலவரைமுறையுடன் கூடிய பதவி உயர்வு, மற்றும் அகில இந்திய பொறியியல் ஆணையம் அமைத்தல் போன்ற கோரிக்கைகளை மைய அரசிடம் வலியுறுத்தி பெற தீர்மானிக்கப்பட்டது.










பொறி.M.சுப்ரமணியன், தலைமை பொறியாளர், நீ.வ.து. திருச்சி மண்டலம், திருச்சி அவர்களை நமது திருச்சி கிளைச் சங்கத்தின் பொறுப்பாளர்கள் நேரில் சந்தித்து வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.










நீர்வளத்துறையில் சிறப்பு தலைமை பொறியாளர்களாக பதவி உயர்வு பெற்ற பொறி.P.பாபு, பொறி.S.மனோகரன், பொறி.I.செல்வபாக்கியம் மற்றும் பொறி.M.மரிய ஹென்றி ஜார்ஜ் ஆகியோர்களை நமது தலைமைச் சங்கத்தின் பொறுப்பாளர்கள் நேரில் சந்தித்து வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.



31.05.2023 அன்று சென்னையில் நடைபெற்ற பொறி.K.முருகன், மாநில பொதுச் செயலாளர், பொறியாளர் சங்கம் அவர்களின் புதல்வி திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் நமது தலைமைச் சங்கத்தின் பொறுப்பாளர்கள் நேரில் சென்று வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.



28.06.2023 அன்று விழுப்புரத்தில் நடைபெற்ற பொறி.R.அருட்செல்வி, உதவிப்பொறியாளர், பொ.ப.து. விழுப்புரம் அவர்களது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் நமது தலைமைச் சங்கத்தின் பொறுப்பாளர்கள் நேரில் சென்று வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.

# ‘பொறியாளர்களுக்கு உரிய ஊதியம் வழங்க வேண்டும்’



ஸ்ரீநகரில் நடைபெற்ற இந்திய பொறியாளர்கள் கூட்டமைப்பின் கவுன்சில் கூட்டத்தில் பங்கேற்ற அந்தக் கூட்டமைப்பின் தலைவர் எஸ்.ஆனந்த், பொதுச் செயலர் கே.எம்.ஐ.சையத் உள்ளிட்டோர்.

**சென்னை, ஜூன் 19:** பொறியாளர்களுக்கு உரிய ஊதியம் வழங்கவேண்டியது அவசியம் என இந்தியப் பொறியாளர்கள் கூட்டமைப்பின் தலைவர் எஸ்.ஆனந்த் வலியுறுத்தினார்.

இந்தியப் பொறியாளர் கூட்டமைப்பின் இடைக்கால கவுன்சில் கூட்டம் ஸ்ரீநகரில் ஜூன் 17 மற்றும் 18 ஆகிய தேதிகளில் நடைபெற்றது.

இதில் பங்கேற்ற எஸ்.ஆனந்த் பேசியது: நாட்டின் நிலையான வளர்ச்சிக்கு பொறியாளர்களின் பங்களிப்பு முக்கியத்துவம் வாய்ந்தது. சமகாலத்தில் பொறியாளர்கள் எண்ணற்ற சவால்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. எனவே, பொறியாளர்களுக்குப் போதிய அளவிலான ஊதியம் வழங்கப்பட வேண்டும். அவர்களின் சேவைகள் மத்திய நிர்வாக சேவைகளுக்கு இணையாகக் கருதப்பட வேண்டும் என்றார் அவர்.

இந்தியப் பொறியாளர்கள் கூட்டமைப்பின் பொதுச் செயலர் கே.எம்.ஐ.சையத் பேசியது: நாட்டில் உள்ள அனைத்துப் பொறியாளர்களும் ஒற்றுமையுடன் செயல்பட்டு கூட்டமைப்பின் இலக்குகள் வெற்றியடைய பாடுபட வேண்டும் என்றார் அவர்.

மூத்த பொறியாளர்களான எம்.நாகராஜ், எஸ்.டி.சந்த்சூர், ஆர்.கே.மிஷ்ரா, நிரஞ்சன் ஆகியோர் பொறியியல் துறையில் தங்களின் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர். இடைக்கால கவுன்சில் கூட்டத்தை ஜம்மு காஷ்மீர் கட்டடப் பொறியாளர் பட்டதாரிகள் சங்கம் நடத்தியது.

இதில் அமைப்பின் பிரதிநிதிகள், பொறியாளர்கள் உள்ளிட்டோரும் கலந்து கொண்டனர்.

நன்றி - தினமணி - 20.06.2023

# INDEF MID-TERM COUNCIL MEETING HELD

**Chennai:** The mid-term council meeting of Indian Engineers' Federation (INDEF) was held at Srinagar on June 17 and 18 and the meeting was hosted by Jammu and Kashmir Civil Engineering Graduates Association (JKCEGA). Hundreds of delegates belonging to the state, central and UT Government Engineer's Associations across the country actively participated in the meeting.

S.Ananth, Chairman, INDEF, elucidated the role of engineers and their contemporary challenges in the sustainable development of our country.

.K.M.I.Sayyad, Secretary General of INDEF, highlighted the need for the engineering commission for establishing uniformity in payscale, status and career progression throughout the country and stressed for the unity of engineers in achieving the goals of INDEF. Senior Engineers, Er. M. Nagaraj, Er. S. D. Chandsure, Er.R.K. Mishra and Er. Niranjan shared their rich experience in handling the field level issues of engineers and advised them to keep solidarity, commitment and perseverance in their endeavors, according to a press release .

